
# பெண்கள் செய்திமடல்

## சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

மடல் - 22 2022


- நெருப்பாற்றைக் கடக்க.......
- தொழில் அடையாளம் ........
- நரிப்புல் தோட்ட பெண்களின் உழைப்பு
- நெருப்பாற்றைக் கடக்க....... (தொடர்)
- வாய்ப் பந்தல் இனி வேண்டாம்.
- ஜெய்ப்பூர் கால்
- மருத்துவ சிகிச்சை முகாம்.


## நெருப்பாற்றைக் கடக்க.......

**இன்று** நாடே கொந்தளித்துக் கொண்டு உள்ளது. இன்று நமது நாட்டின் பொருள்ாதாரம் ஸ்திரமற்ற நிலையில். எமது பணத்தின் பெறுமதி மிக மிக வீழ்ச்சி அடைந்து கொண்டு... விலை ஏற்றம், பொருட்கள் தட்டுப்பாடு, வறுமை, மனித வரிசைகள்.. என தொடர்ந்து பல சிக்கல்களுக்கு மக்கள் முகம் கொடுத்துக் கொண்டுள்ளனர்.

மக்கள் சுய எழுச்சியாக தெருவுக்கு இறங்கி தத்தமது எழுச்சி குரல்களை சுயமாக உரத்துக் கூவத் தொடங்கிவிட்டனர். விடைகாண முடியா கேள்விகள் சூழ்ந்து மனதை அழுத்தும் காலமிது.

ஏன் இந்த நிலமை

**கேட்டால் நாட்டிற்கு கடன் என்பது பதிலாக உள்ளது. எதற்கு கடன், கடன் கட்ட முடியாத நிலையில் மீண்டும் மீண்டும் கடன். வாங்கிய கடன்களை என்ன செய்தோம்? தின்று தீர்த்தோமா, பைகளை நிரப்பினோமா, கொங்கிறீட் மரங்களை எழுப்பினோமா···**

கடந்த காலத்தில் நாம் உழைத்தவை எங்கே..?

மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டு வேலைக்குச் சென்று அன்னிய செலவாணியை உழைத்து தந்த பெண்கள்,

பெருந்தோட்டங்களில் பணி புரிந்த பெண்கள்,

ஆடைத் தொழிற்சாலைகளில் தொடர்ச்சியாக வேலை செய்த பெண்கள், சுற்றுலா பயணிகள்···இறப்பர், தேயிலை, தெங்கு போன்ற ஏற்றுமதிப் பொருட்கள், மாணிக்கமும், இரத்தினக்கல்லும் கொழிக்கும் நாட்டின் பகுதிகள்···இன்னும் இன்னும்···

**இவையெல்லாம் ஈட்டித் தந்தவை வருமானமா அல்லது காற்றில் கரையும் கற்பூரமா ···?**

தினசரி விலையேற்றத்தால் காலையில் கண்விழிக்கப் பயம், பட்டினிச் சாவிற்கு பயம், மருந்தில்லாத பயம், சமூகப்பாதுகாப்புத் திட்டங்கள் (சமுர்த்தி )செயலிழக்கும் என்ற பயம், அரச தொழிலும் பறிபோகும் என்ற பயம், அதிகரிக்கும் பெண்களுக்கெதிரான வீட்டு வன்முறைகளால் பயம், பாதிக்கப்படுபவர் உரிமைகளின் பாதுகாப்பிற்கென நியமிக்கப்பட்ட பொலிசாரின், அரச அதிகாரிகளின் அசமந்தப்போக்கின் அதிகரிப்பால் அதிகாரத்தால் பயம், லஞ்சம், ஊழல், அதிகரிக்க அதிகரிக்க பயம், கல்வி இடை நடுவில் நின்று விடுமோ, இலவச சுகாதாரமும், இலவச கல்வியும் காசுக்கு விற்கப்படுமோ என்ற பயம்···




**பயத்தைத் தவிர மற்றய அனைத்திற்கும் வரிசையில் நிற்க வேண்டுமே என்ற பயம்**

தொடரும் ......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழில் அடையாளம்

**தொழில் அடையாள அட்டை தனி நபர் அதிகாரத்திற்கு அல்ல.**

பெண்களின் தனித்துவம் இன்றைய சூழலில் பிரதி பலிக்கும் சம்பவங்களில் ஒன்றாக ஒரு சகோதரி பகிர்ந்து கொண்டது.. அடுத்த வருட பெண்கள் தினத்தையும் இவ் வருட பெண்கள் தினத்தையும் இணைந்தே சிந்திக்கத் தூண்டியது தற்போது **எதற்குத்தான் வரிசை இல்லை மரணத்தை தவிர..**

எமது குழுவில் உள்ள நண்பி ஒருவர் கடந்த கிழமைகளில் ஒருநாள் இரவு வரிசையில் நின்றுள்ளார். அவருக்குத் தெரிந்த சில பெண்களும் தமது மோட்டார் சைக்கிள்களை அருகருகாக வைத்துக்கொண்டு பெற்றோலுக்கா ....., இரு பகலுடன் இரண்டாம் நாள் இரவை கழித்துக்கொண்டு வரிசையில் நிற்கிறார்கள்......

நடுச்சாமம் இருக்கும் திடீரென ஒருவர், இப் பெண்களின் மோட்டார் சைக்கிள்களுக்கிடையில் தனது மோட்டார் சைக்கிளை செருக ..... பெண்கள் குரல்கள் ஓங்குகிறது. உடனே தனது அடையாள அட்டையை காட்டுகிறார். நான் யார் தெரியுமா எனது பவர் தெரியுமா.. என்ர படிப்பு உத்தியோகம் உங்களுக்கு தெரியுமா..அவர் ஒரு பிரதேச செயலகத்தில் தொழில் புரிபவர்....

பெண்கள் விடுவார்களா..?

"நாளை சந்திக்கிறன்" பின் கால் பிடறியில் பட.... விழுந்த மண்ணை தட்டியபடி அவர்..


**சமத்துவம், பெண்கள் உரிமை, பாகுபாடு..... ?**

இவரது இச் செயல் இவ் வருட சர்வதேச பெண்கள் தினத்தை நினைவுக்கு கொண்டு வருகிறது.

தற்போது அரச அலுவலகங்கள் முழுவதும் இதனை கொண்டாடுகிறார்கள்.... அவை வெறும் வாய்ப் பேச்சுத்தானா.....எழுதிய திட்டத்தை நிறைவேற்றும் ஒரு கண்துடைப்பு நிகழ்வா?

இப்பொழுது புரிகிறது அவ்வாறான நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் பெண்களின் வெளிச் சொல்ல முடியாத வேதனைகளின் உண்மை...
இது இவ் வருட நிகழ்வின் ஒரு சம்பவம்......

(அண்மைக்காலமாக நாடளாவிய ரீதியில் மார்ச் எட்டு அன்று பெண்கள் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. எனினும் சில நிறுவனங்கள் இதனை பண்டிகையாக மட்டுமே நிகழ்த்தி அத்துடன் முடித்துவிட்டு அடுத்த வருடமும் பண்டிகையாகவே முடிந்து விடுகிறது. இது நிறுவனங்களின் பண்டிகையாக நிகழ்த்தப்படுகிறது. அன்றைய தினம் தாங்கள் பணிபுரியும் ஏரியாவில் உள்ள தமது





சேவையைப் பெறும் பெண்கள் அனைவரும் அழைக்கப்படுவார்கள்...... அவர்களில் பலர் வீட்டில் அதிக சோலி இருந்தாலும் தமது அடுத்த காரியம் ஆக வேண்டுமே என்ற நோக்குடன் இப் பெண்கள், உத்தியோகத்தர்களின் தொழில் அடையாள அதிகாரத்திற்கு பயந்து புறப்பட்டு விடுவார்கள். (அர்ப்பணிப்புடன் மனச்சாட்சியுடன் மக்களை மதிக்கும் அலுவலகர்களை இங்கு குறிப்பிடவில்லை).

அந்த வகையில் மகளிர் தினத்திற்கு சென்று வந்த பெண்களின் குரல்கள் இங்கு...

"நிண்ட நில, பச்ச தண்ணியும் இல்ல, "மனிசன சாகடிக்கவா கூப்பிட்டனீங்க.... பக்கத்தில போய் தண்ணி வாங்கி குடிச்சா கூப்பிட்ட உங்களுக்குத்தான் அவமானம்" எண்டு நான் கேட்ட பிறகுதான் போய் தண்ணி வாங்கி வந்தாங்க. அதுவும் முன்னுக்கு அம்புட்ட ஆக்களுக்கு மட்டுந்தான். மற்றாக்கள் வாய் பிளந்துத்து நிண்டதான்"

"நடுப்பகல் ஒரு மணிக்கு பண்ரண்டு வஸ்ச புக் (book) பண்றீங்க ஒவ்வொரு வஸ்சிலயும் நாற்பது சீட் இருக்கு. வஸ் நிறய ஆக்கள், உங்களுக்கு கணக்கு தெரியாதா எத்தன கதிர போடணும் என்று. முன்னுக்கு வந்தாக்களுக்கு மட்டும் கதிர. மற்றாக்கள் நாலலரை மட்டும் நிண்ட நில"
"தங்கட ஊர் சனங்கள ஏத்தி வர அனுப்பினது ஏசி வஸ். எங்களுக்கு நோமல் வஸ்....(சிரிக்காள்) "என்டு அதையும் கேட்டுப் போட்டன்"

"பக்கத்தில நிண்ட மச்சாள் ஒருத்தருக்கும் தெரியாம எனக்கு ரகசியமா கிள்ளுறாள். "அடியே பேசாத எல்லாரும் உன்னப் பாத்து சிரிக்கப் போறாங்க எண்டு. எல்லாரும் இப்படியே நினச்சுத்து இருந்தா யாரு இதெல்லாம் தெரியப்படுத்திற......

ஊருக்கு வந்தாப் பிறகு சொல்றாளுகள் என்னத்தான் மாதர் சங்க தலைவியா வைக்கனுமாம். அப்பத்தான் நான் பயமில்லாம எல்லாரோடயும் கதைப்பனாம் என்று"

❖ தொலைபேசி அழைப்பின் ஊடாக
" எப்படி இருக்கீங்க"

"சரியான தல சுத்து"
"தல சுத்தெண்டா பிரசர் பாத்திங்களா?"
"என்னத்த பேசுற எல்லாரும் மகளிர் தினம் கொண்டாடுறாங்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதாக்குறைக்கு சூம் மீற்றிங்கிலயும் மகளிர் தினம் கொண்டாடுறாங்க.... அங்கயும் இங்கயும் ஓடி ஓடி கம்பியூட்டருக்கு முன்னாலயும் குந்திக் கிடந்து....

"பரவாயில்ல பெண்கள் சார்ந்த சிந்தனைகள் ஓடுதே"

"என்னத்த சொல்ற ஆம்பிளயள் எல்லாரும் முன்வரிசையில இருக்க அவங்க கதைக்கிறத கேட்கிற ஆக்களா பொம்பிளயள் பின்வரிசையில இருக்காங்க..... இந்த பொம்பிளைகள் பிரச்சன முடிக்க அலுவலகத்துக்குப் போனா அங்க காரியத்த முடிச்சுக்குடுக்கிறத்துக்கு ஆக்கள் இல்ல ஒப்பீஸ் கதிரயில"

ஆனா மேடையில பொம்பிளயல பற்றி புழுகி புழுகி கதைக்காங்க... இவங்க இத செய்தாங்க,... அத செய்தாங்க... தனிய இருந்து செய்தாங்க...

இதெல்லாம் கேட்டா எனக்கு பிறசர் வராம என்ன செய்யும்..."



மேலே கூறப்பட்டவை சர்வதேச பெண்கள் தினத்தில் கலந்து கொண்ட பெண்களின் புலம்பல்களாகும்.

இனியாவது பெண்கள் தினத்தன்று "நாம் பெண்கள் சார்ந்து என்ன என்ன செய்யாமல் விட்டோம்" என சிந்தித்து உண்மை பேசும் நாளாக அதனை கொண்டாட வேண்டும்.

## நரிப்புல் தோட்ட பெண்களின் உழைப்பு

பெண்களின் சக்தி மகத்தானது. எனினும் இவர்கள் காலைச் சுற்றிய பாம்புபோல் அடுத்த அடியை தூக்கி வைக்க முடியாதபடி பல விடயங்களுக்குள் இவர்கள் கால்கள் கட்டுண்டு கிடக்கின்றன. ஆகவே அவர்களுடன் இணைந்து இவ் விடயங்களைக் கையாண்டு பெண்கள் தொழில் முயற்சியை ஊக்குவிப்பது முக்கியமானதாகும்.

இந்த வகையில் நரிப்புல் தோட்டத்தில் வாழும் பெண்கள் மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும் இவர்கள் தொழில் செய்து ஈட்டும் வருமானம் இவர்கள் வாழும் சமூகத்தைச் சென்றடைகின்றபோதும் இவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களும், தேவைகளும் இவர்கள் தனித்தே முகம் கொடுக்க வேண்டி வருவதுடன் இது சார்ந்து சமூகத்தில் பொதுவாக உணரப்படவில்லை.

சூரியாவானது அவர்களது தொழில் மேம்படுத்தலுக்கூடாக சமூக பொருளாதார முன்னேற்றத்திற்காக குறிப்பிட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.


மீன்பிடிச் சங்கம் என்பது மீன்பிடித் தொழிலாளர்களின் நலன் கருதி உருவாக்கப்பட்டது. எனினும் நரிப்புல் தோட்டத்தில் உள்ள பெண்கள் அங்குள்ள மீன்பிடிச் சங்கத்தில் தாமும் ஒரு அங்கத்தவராக பதியப்பட்டிருக்கவில்லை. ஆகவே எமது அமைப்பானது மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் பெண்கள் நலனை கருத்திற் கொண்டு அவர்களை சங்கமாக பதியும் முயற்சியில் ஈடுபட்டது. இந்த முயற்சி காரணமாக தற்போது "பெண்கள் மீன்பிடிச் சங்கம்" உருவாக்கப்பட்டு பதியப்பட்டு அதில் தொழில் செய்யும் பெண்கள் அங்கத்தவர்களாக உள்வாங்கப்பட்டு இயங்கி வருகின்றனர். மற்றும் அங்கு வாழும் மீன்பிடி பெண்களின் வாழ்வாதாரத் தொழிலுக்கு உதவும் முகமாக இரு தோணிகளும் சூரியாவால் கையளிக்கப்பட்டுள்ளன.



பொதுக்கட்டிடம் என்பது ஒரு கிராமத்தின் மையப் புள்ளியாகும். இயங்குதலை, பெண்கள் கூட்டுறவை ஒன்றிணைக்கும் மையப்புள்ளியாக இது இயங்குகிறது.

இந்த வகையில் கடந்தகாலங்களில் தன்னார்வ அமைப்பு ஒன்றினால் இக் கிராமத்திற்கென வழங்கப்பட்டிருந்த பொதுக்கட்டிடம் இடம்பெயர்வுகளின்பின் மிகவும் சேதமுற்று காணப்பட்டது. பிரதேச செயலகத்தின் அனுமதியுடன் சூரியா திருத்த வேலைகளை மேற்கொண்டு இக்கட்டிடத்தை கிராம மக்களுக்கு தற்போது வழங்கியுள்ளது.

இங்கு சில காலங்களில் அதிகமான மீன்கள் பிடிபடும். இவ்வாறு பிடிபடும் மீன்களை பெண்கள் கருவாடு போட்டு விற்பனை செய்வர். எனினும் மாரி காலங்களில் வெயில் இன்மையால் மீன்கள் பழுதாகிவிடும் ஆகவே இவர்கள் தொழிலை பாதுகாக்கும் பொருட்டு கருவாட்டு மெசின் ஒன்றும் வழங்கப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெருப்பாற்றைக் ..... (தொடர்)

**நாளையும் நடக்கும்**



போராட்டம்....... வெல்லும் எனும் நம்பிக்கையே காலம் காலமாக எழும்புதல்களுக்கான காரணங்களாக அமைந்து விட்டன.

இன்று பொருளாதார வீழ்ச்சி பொதுவான பிரச்சனையாகி விட மக்களது குரல்கள் கேள்விகளாக வெளிவரத் தொடங்கிவிட்டன.

நடந்தது என்ன..? இன்றைய நிலையின் பொறுப்பை ஏற்பது யார்?

இலங்கை சுதந்திரம் அடைந்தபின் கதிரைகளைக் கைப்பற்றுவதை நோக்காகக் கொண்ட தலைவர்கள் நீட்டிய விரல்களின் பின்னே மக்கள் பார்வைகள் நீண்டதே தவிர சொந்த சிந்தனைக்கு இடம் இருந்ததா?

இனம், சாதி, மதம், மொழி, பெரும்பான்மை, சிறுபான்மை என்ற அடிப்படையில் தலைவர்கள் விரிய விரிய ஜனநாயகம் சுருங்கிப்போனது.

நாடு இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம். கொள்ளையர்கள், கொலைகாரர்கள், சுரண்டல்காரர்கள் கதிரையைப் பிடிப்பதற்கான ஆயுதமாக இனம், சாதி, மதம், மொழி, பெரும்பான்மை, சிறுபான்மை என்ற சொல்லாடல்களை அணிந்து கொண்டனர்.
இவர்கள் பேச்சில் மயங்கிய மக்கள் தம் இடுப்பு வேட்டி களவாடப்பட்டு மிஞ்சிய கோவணமும் பறிபோகும்வரை மிதப்பிலேயே கிடந்தனர்.

பாவி இட்ட தீ அடிவயிற்றை எரிக்கையில் சூடு தெரிகிறது
அரச கல்லாப்பெட்டியில் காசு இல்லை, வீட்டு பட்டறையில் நெல் இல்லை, வைத்தியன் கையில் மருந்தில்லை, மாற்றி எடுக்க பொன் இல்லை, சாமான் வேண்ட டொலர் இல்லை... இல்லை... இல்லை...

குட்ட குட்ட குனிந்து கொண்டே இருந்து விட்டு இப்போ நிமிர்ந்து பார்த்தால் தலைக்கு மேலே தாமரைக் கோபுரம் முளைத்து நிற்கிறது.

வெளிநாட்டு கார் ஓட பெருந்தெருக்கள் , மேன்பாலங்கள், இடறி விழ நடைபாதைகள் முளைத்தன... நாம் நிமிர முடியாதபடி எமது உழைப்பை உறிஞ்சி முளைத்தன அவை.

"தலை விதி" என்றபடி குளத்திற்குள்ளும் ஆற்றுக்குள்ளும் முங்கி எழுந்து மக்களைப் பேய்க்காட்டும் நாடகங்கள்

பேய்க் காட்டும் நாடகங்களுக்குள் விழி பிதுங்கி வாய் பிளந்து மக்கள் இருக்க, அங்கே மூத்த குஞ்சுக்கு இரைதேடி சுவிஸ் வங்கியில் காசு போட இளைய குஞ்சுக்க இரை தேடி குவைத் கம்பனியில் பங்கு வாங்க, நடுக் குஞ்சுக்கு இரை தேடி கடல் கடந்து கப்பல் வாங்க... இதன் விளைவு....?

தெருக்களை இன்று பார்க்க முடியவில்லை. அரசடி சுற்றுவட்டாரம் மணிக்கூட்டு கோபுரம்..தெருவை அடைத்து நிற்கும் டீசல் வாகனங்கள்..பா..ரியதும் மிகப் பாரிய வாகனங்களுமாய்... எதிரே கோயில், கோயிலுக்குப் பக்கத்தில் மூக்குக் கண்ணாடி கடை, வாசனா பேக்கறி,.. ஊமையாய் நிற்க எதிரே நடக்கமுடியாதபடி தெருவில் முக்கால் பகுதியை பிடித்து நிற்கும் வாகனச் சாரதிகளில் வெற்றிலை சாற்றுத் துப்பல்கள், அவர்கள் சாப்பிட்டு விட்டு போடும் வெற்றுத் தண்ணீர் போத்தல்கள தெருவில் வாகனக் கால்களில் நசுக்கப்பட்டு கிடக்கின்றன. இன்று தெருச் சுத்தம் **மொத்தமாய் செத்து விட்டது.**



## வாய்ப் பந்தல் இனி வேண்டாம்.

எமது சமூகத்தின் வளர்ச்சியில், அதன் அபிவிருத்தியில் பங்கெடுக்கும் முக்கிய காரணிகளில் ஒன்றாக மாற்றுத் திறனாளிகளின் உழைப்பும் அடங்குகிறது. எனினும் இவர்களது உரிமைகள் தொடர்பான பேச்சுக்கள் மேடைகளில் நடத்தப்படும் நிகழ்வுகளில் சிறப்புப் பேச்சாகவும் (பார்த்து வாசித்தல்) பின்னர் கைதட்டலுடனும் முடிந்து விடுகிறது. தொடர்ந்து நடைபெறும் மாற்றுத்திறனாளிகளின் நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்குக் கூட பிரதம அதிதிகளுக்கு



மாற்றுத்திறனாளிகள் தினம் டிசம்பர் 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழமையாக நேரம் இருப்பதில்லை. ஒரு சொறி (sorry) சொல்லலுடன் எழுந்து சென்று விடுகின்றனர்.

எது எவ்வாறிருப்பினும் தமக்கான தேவைகளையும் உரிமைகளையும் மாற்றுத் திறனாளிகள் தமது குரலில் பேசத் தொடங்க ஆரம்பித்தாலும் அதனை கேட்கும் சூழலை நாம் உருவாக்குதல் முக்கியமாக உள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிட்டத்தட்ட 7000 பேர் மாற்றுத்திறனாளிகளாக இருக்கின்றனர். இதில் 50 வீதத்திற்கும் மேற்பட்டவர்கள் பெண் மாற்றுத் திறனாளிகளாக உள்ளனர். இவற்றுள் பெரும்பான்மையானோர் தமது அன்றாட வாழ்வைக் கொண்டு நடத்த மிகுந்த சிரமப்படுகின்றனர். பொதுவாக எமது நடைமுறைகளும் கொள்கைகளும் சேவையின் தன்மைகளும் மாற்றுத் திறனாளிகளுக்கு தொழிலினை வழங்குவதற்கான வாய்ப்பு வசதிகளை வழங்குகின்றதா என்றால் இல்லை என்பதே பதிலாக இருக்கும்.

மாற்றுத் திறனாளிப் பெண்கள் பொது போக்குவரத்து வசதிகளை பெற்றுக் கொள்கையில், சுகாதார சேவைகளைப் பெற்றுக் கொள்கையில் ஏனைய வசதிகளை பெற்றுக் கொள்ளும்போதும் தங்களை அடையாளப்படுத்த முடியாத காரணத்தால் பல சேவைகளைப் பெற முடியாதுள்ளதாகவும் ஆகவே தமக்கென ஒரு அடையாள அட்டை தேவை என்பதையும் தொடர்ந்து முன்வைத்து வருகின்றனர்.

மாற்றுத் திறனாளிப் பெண்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்குவதற்கும் அவர்கள் அதனை முன்னெடுத்துச் செல்வதற்கும் தனியார் மற்றும் அரச, அரசசார்பற்ற துறையினரால் என்ன செய்யப்படலாம் என்பதை சிந்தித்து கலந்துரையாடல்கள் நடத்தப்பட வேண்டும். ஏனெனில் பொது நிர்வாக அமைச்சின் 1988ம் ஆண்டின் சுற்றறிக்கையின்படி மாற்றுத்திறனாளிப் பெண்களுக்கான வேலைவாய்ப்பு ஒதுக்கீடு 3 வீதமாக இருந்தது.

எனினும் இது நிரப்பப்படுகிறதா வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படுகிறதா என்பதற்கான ஆய்வுகள் இல்லை. மாற்றுத் திறனாளிப் பெண்களை குறிப்பாக வேலைக்கு செல்லும் பெண்களை சமூகம் பார்க்கும் மனப்பாங்கும் கண்ணோட்டமும்



மாற்றுத்திறனாளிகள் தினம்

மாற்றப்படல் வேண்டும். கல்வித் தகமைக்கு அப்பால் தொழிற் தகமைகளுக்கும் திறனுக்கும் முன்னுரிமையளிக்கப்படல் வேண்டும்.

இணைந்து தொழில் செய்ய விரும்புபவர்களுக்கு பொருத்தமான தெரிவுகளும் பொருத்தமான இடங்களில் சந்தை வாய்ப்புக்களுடன் தொழில்கள் உருவாக்கிக் கொடுக்கப்படல் வேண்டும். அரச துறையினரும் தனியார் துறையினரும் தொழில்களையும் அத் தொழிலை மேற் கொள்வதற்கான அனுகும் வசதிகள் போக்குவரத்து வசதிகள் என்பவற்றை ஏற்படுத்திக் கொடுத்தல் அவசியமானது. அத்துடன் அவர்களது தொழில் அமையும் இடத்தினையும் கவனத்திற் கொள்ளல் முக்கியமானது.


இவர்கள் கடைகளுக்கு வரிகள் அறவிடுகையில் இவர்கள் முன்னேற்றத்தினை கருத்திற் கொண்டு விசேட சலுகைகள் வழங்கப்பட வேண்டும்.

மாற்றுத் திறனாளிகளைப் பராமரிப்பவர்களையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும். ஏனெனில் பராமரிப்பவர்களால் வேலைக்குச் செல்ல முடியாத நிலை, தூர இடங்களுக்கு வேலைக்குச் செல்ல முடியாத நிலை, மாற்றுத் திறனாளியான தனது குடும்ப அங்கத்தவரை பராமரிக்க வேண்டிய பொறுப்பில் உள்ள மாணவிகள் தங்கள் கல்வியை இடை நடுவில் கைவிட வேண்டிய நிலை ஏற்படுகிறது.

ஆகவே மாற்றம் பெற்ற திறனாளிப் பெண்களுடனும் இணைந்து அனைவரும் மாற்றத்திற்கான பரிந்துரைகளை செய்ய வேண்டும். அந்த வகையில் மாற்றுத் திறனாளிகள் தினத்தையொட்டி அரச கட்டமைப்புக்களால் நடத்தப்படும் நிகழ்வுகள்கூட மேற்கூறிய விடயங்களுக்கான ஒரு துவக்க புள்ளியாக அமைய வேண்டும்.

## ஜெய்ப்பூர் கால்

"வாலில்லாத பட்டம் காற்றில் அள்ளுண்டு செல்லும்" அது மாதிரிதான் காலில்லா எங்கள் நிலை.





"நான் இப்ப ரெண்டு கையையும் விட்டிற்று ரெண்டு காலையும் நிலத்தில ஊண்றித்து நிக்கன் அம்மா"
கால் கிடைத்த மகிழ்ச்சியில் உள் இருந்து வரும் மானுட ஒலி இது. இலை மறைகாயாய் எத்தனை துயரங்கள் ஒழிந்திருக்கின்றன.

வேர் இன்றி மரம் சாய்வது போல் கால் இன்றி மக்கள் மண்ணுடன் தவழ்கையில் நெருப்பாய் சுடுகிறது மனது.

கடந்த கால யுத்தத்தின் சோக சாட்சியாக கால் இழந்த மக்கள் இப்போது கண்ணுக்குள் வரத் தொடங்கிவிட்டார்கள். அவர்களுடன் கடந்த ஒரு வருடமாக பயணிக்கையில் அவர்கள் சொன்னவை "முதலில் எங்களது அடிப்படைப் பிரச்சனையும் அடிப்படைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேவையும் என்பது நாங்கள் யுத்தத்தில் இழந்து போன எங்களது கால்தான்".

"புதுசா கால் ஒன்று வேண்டும் அக்கா. அது இல்லாட்டி பழுதாகி வெடிச்சுப்போன காலை ரிப்பயர் பண்ணியாவது எடுக்கலாமா"

"எங்களுக்கான தேவைய நாங்களே பாக்கணும் என்றா, நாங்களும் எங்களில நம்பிக்க வைக்கணும் என்றா, தங்கி வாழாம சுய கௌரவத்துடன் இருக்கணும் என்றா, எங்கட கால முதலில் புதுப்பிச்சி எடுக்க எங்களுக்கு என்ன வழி இருக்கு என்று நீங்க பாருங்க"

கால் இழந்த மாற்றுத் திறனாளிப் பெண்களின் கோரிக்கைகளின் பின் இதற்கான இணைந்த தேடுதல்கள். பல இடங்களைத் தொடர்பு கொண்டது... அரச, அரச சார்பற்ற அமைப்பு உத்தியோகத்தர்களைச் சந்தித்தது...

இதன் வெற்றியாக கிழக்கு மாகாண சமூக சேவைப் பணிப்பாளர், கிழக்கு மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர்கள் இவர்களுக்கூடாக யாழ் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிலையத்துடன் தொடர்பை மேற்கொண்டு அவர்கள் மூலம் இப் பெண்களுக்கான செயற்கைக் கால்களைப் பெற்றுக் கொடுத்ததும் ஆகும்.

இதன்போது இப் பெண்கள் பல சவால்களுக்கு துணிச்சலுடன் முகம் கொடுத்தது முக்கியமானது.




அது ஒரு கொரோணா ஊர் முடக்கல் காலம் - ஆகவே பிரயாண அனுமதி பெறப்பட வேண்டியிருந்தது. இன்றுவரை சந்தேகப்பார்வை தொடரும் சூழலில் சோதனைச் சாவடிகளை கடக்கையில் அங்கு எழும் சந்தேகப் பார்வைகளையும் கால்களை இழந்த இப் பெண்கள் துணிச்சலான பதில்களுக்கூடாக கடக்க வேண்டியே இருந்தது.

இதில் பல பெண்கள் உழைப்பாளிகள், இவர்களில் தங்கி வாழும் சிறு பிள்ளைகள், முதியோர்கள், கணவன்மார்கள், நோயாளியான உறவுகள், ஆகவே அவர்களை பராமரிப்பது யார் எனும் கேள்வி, வீட்டில் உள்ள பொருட்களுக்கு யார் பாதுகாப்பு என்ற கேள்வியுடன் கால் தேடிய இவர்கள் பிரயாணம் ஆரம்பித்தது.

அதுவும் மூன்று தடவை . கால் அளவு கொடுக்க, செய்த காலை போட்டுப் பார்க்க, போட்டு நடந்து பழக, திருத்தம் செய்யப்பட்ட காலை பெற்றுக்கொள்ள. இத்தனைக்குள்ளும் இவர்களுக்கு ஆறுதல் கொடுத்தது ஜெய்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவன அலுவலர்களின் அக்கறையும் அன்பும் விரைந்து செயற்பட்ட விதமும் தான்.

எனினும் இந்த நிலையத்திற்கு வர முடியாது தான் வாழும் இடத்தில் அரசாங்க ஆஸ்பத்திரியில் செயற்கைக்கால் பெறுவதற்காக கால் அளவு கொடுத்த பவதாரணியின் ஆதங்கம், கோபம் இது. " நம்மட ஆஸ்பத்திரியில் கால் போட அளவு கொடுத்தது இரண்டாம் மாதம்....

இருங்க கூப்பிடுவம் என்றாங்க, நான்தான் அவங்கள கூப்பிட்டு கூப்பிட்டு விசாரிக்கன்.... இன்றுவரை யாரும் கூப்பிடவுமில்லை", கால் கிடைக்கவுமில்லை.



## நெருப்பாற்றைக் ......... (தொடர்)

22.07.2022 அதிகாலையில் போராட்டக் களத்தின் மீது நடந்த போராட்டக் கலைப்புச் சம்பவம், மக்கள் சிந்தனை 1983ம் ஆண்டு ஜூலை 23ம் திகதியை நினைந்தழுகிறது.


மக்கள் கருத்துக்களுடன், மக்கள் குரலுடன் செவிசாய்க்காது மக்களுடன் எந்தவித பேச்சுக்களுமின்றி உடன்பாடுகளுமின்றி ஒருதலைப்பட்ச அதிகாரத்துடன் எவ்வாறு இந்த பொருளாதார பிரச்சனையை முடிவுக்கு கொண்டு வருவது... அதிகாரம் பதவி மட்டுமே இலக்கு என்றால் மக்கள் குரல் எவ்வாறு ஓயும்... மக்கள் எழுச்சி என்பது அடி வயிற்றில் இருந்து எழுந்த நெருப்பால் உருவானது. இதனை ஜனநாயக நீரோட்டத்தால் மாத்திரமே அணைக்க முடியும். எனினும் ஜனநாயகமும் நிறைவேற்று அதிகாரமும் அவை ஒன்றிற்கு ஒன்று முரனான விடயங்கள். எவ்வாறு ஒரே யாப்பிற்குள் முரணான இரு விடயங்கள் இருக்க முடியும். ஆகவே அமைப்பு மாற்றம் தேவை. (system change) இந்த மாற்றம் தேடிய போராட்டக் குரல்கள் நாடு எங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடன் உயர
பொருள் குறையும்
பொருள் குறைய
பசி உயரும்
பசி உயர
புன்னகை மறையும்



நாடு நடு ரோட்டிற்கு வந்து விட்டது. யார் இனி நாட்டை ஆள்வது எனும் கேள்வியுடன் சுரண்டல் ராசனை திரத்தும் போராட்டங்கள் வெடிக்க, சனத்தை தின்று தீர்த்த "கோட்டா கோ" அதன் பதிலீடு "ரணிலும் கோ" எனும் கோசத்திடையே யோசிக்க அவகாசமின்றி பெற்றோலுக்கும் டீசலுக்கும், மண்ணெண்ணைக்கும் தெருவில் நிரம்பி வழியும் சனத்திரளால் ஒருவர் கையை ஒருவர் பிடித்து திருவிழாக் கூட்டத்திற்குள் செல்வதுபோல் தினம் தினம் தெருவெல்லாம் சன வெள்ளம்...




ராவணண் ஆண்டால் என்ன சண்டைக்கு வந்த குரங்குக் கூட்டம் ஆண்டால் என்ன? கிடைப்பதை இன்னும் சுருட்டுவம் என அலையும் நம்ம எட்டப்பர் கூட்டம் ஒருபக்கம், இருக்கவும் பிழைக்கவும் எடுக்கவும் இனி இங்கு என்னதான் இருக்கு என்றபடி நாட்டை விட்டு ஓடும் மக்கள் கூட்டம் மறு புறம் எனினும் இருப்பதையாவது தக்கவைக்க மாட்டோமா என்ற நிலைப்பாட்டுடனும் இருப்பதை பிடித்து மீண்டும் எழும்ப வேண்டுமே என்ற முயற்சியுடனும் இளைஞர், பெண்கள் மக்கள், முயற்சிகள் போராட்டங்கள் வலுப்பெறத் தொடங்கின... "கோட்டா கோ கம" பொதுமக்கள், இளைஞர்கள் அறவழிப் போராட்டம் இதற்கு வலு சேர்க்கும் முகமாய் நாடு முழுவதும் ஆதரவு போராட்டங்கள்.

இந்த வகையில் மட்டக்களப்பில் பொது மக்கள் போராட்டம்... நீதியான அரசு, நிம்மதியான வாழ்வு வேண்டி பொது மக்கள் போராட்டம். இதன் வடிவம் அமைதி நடை. நியாயமான கோரிக்கைகளை எழுதி தமது தோள், முதுகு, நெஞ்சு என வாசகங்களை சுமந்தபடி மக்களின் அமைதி நடை இரச்சல்களிடையே அமைதியைக் கொடுத்தபடி தொடர்ந்து கொண்டே உள்ளது .

இது தினமும் காலை 9.00 மணிக்கு சென் செபஸ்தியார் ஆலய முன்றலில் ஆரம்பித்து காந்தி பூங்காவில் முடிவடையும்



**தினமும் அமைதியாக மெதுவாக ஒருவர் பின் ஒருவராக நடக்கும் இவர்கள் யார் ?**

பொது மக்கள் பெற்றோர்
நோயாளிகள் சிறுவர்கள்
மாணவர்கள்

ஒரு மாதத்திற்கு மேலாக நடக்கின்றார்கள். அரசடி ஊடாக காந்தி பூங்காவரை ஒவ்வொரு நாளும் நடக்கிறார்கள்.

**ஏன் நடக்கிறார்கள்**

அனைவருக்கும் உள்ள அதே பயந்தான்
அடுத்த வேளை உணவு ...?
அடுத்த வேளை மருந்து...?
அடுத்த வேளை பிரயாணம்..?

காலை எழும்புகையில், எதனுடைய விலை எவ்வளவு கூடியதோ...?
கொழுத்தும் வெயிலில கால் கடுக்கும் நீண்ட வரிசை... தினம் தினம் இதுவே மக்களின் வாழ்வாகிப் போனதால்
இவர்கள் நடக்கிறார்கள்.

நடந்து என்ன பிரயோசனம் என்ற கேள்வியை யாரும் இந்த அமைதி நடையைப் பார்த்துக் கேட்கலாம்...
நல்ல கேள்வி !
கடும் பயத்தினிடையே மன அமைதி அளிக்கும் நடை இது சுமைகள், கஸ்டங்கள், தனிமை,..இவை எம்மை அழுத்தும் இத் தருணங்களில் "நீ தனியாக இல்லை" என்று தலை தடவி ஆறுதல் தரும் நடை இது.
ஆதிக்கம் செலுத்துவோர் மேலும் மேலும் மக்களை அழுத்தும் இச் சூழலில் மக்கள் குமுறி வெடித்தால் அந் நெருப்பில் நாமும் நம்மவரும்தான் எரிவோம். அதுவே வன்முறையின் தன்மை. அதுவே ஆதிக்க சக்திகளின் வெற்றி. இச் சூழலில் குமுறல்களுக்கு ஆறுதல் தரும் நடை இது. கஸ்டத்தை, குமுறலை, பயத்தை ஆக்கபூர்வமான நீண்ட கால போராட்டமாக மாற்றவும் ஒடுக்குபவரை ஒன்றிணைந்து கேள்வி கேட்கவும், சோர்ந்துவிடாமல் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவிக்கவும் தேவையான பொறுமையை, சக்தியை தருவது இந்த நடை.

**அமைதி நடைக்கூடாக முன் வைக்கப்படும் கோரிக்கை என்ன?**

ஊழல் இல்லாத, மக்களை சுரண்டாத, மக்களை வதைக்காத நியாயமான அரசும், அரச கட்டமைப்பும், மக்களுக்கான நேர்மையான அலுவலகர்களும் வேண்டும். அநீதி நடக்கையில் ஒன்றிணைந்து போராடும் சமூகம் வேண்டும்.

**நம்பிக்கை**

பாதைகள் எமக்காக போடப்பட்டிருப்பதில்லை. நாம் நடக்க நடக்கவே எமக்கான பாதைகள் உருவாகும். நம்பிக்கையுடன் நடக்கும் போராட்டம் இது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளைய மருந்து

## நாளைய உணவு ? நாளைய கல்வி

வாழ்வதே கேள்வியாக காணப்படுகின்ற இத் தருணத்தில் நஞ்சற்ற உணவை இவ்வுலகிற்கு கொடுப்போம் என்ற தொனிப்பொருளில் இவ் வருடம் பெண்கள் தினம் நினைவு கூரப்பட்டது.

மண்ணுக்குள்ள நஞ்ச வைச்சி
மரத்த நாட்டுறம்
அந்த மரம் வளர கெமிக்கலத்தான்
நாங்க வீசுறம்

வண்ண வண்ண
வண்ணாத்திகள் செத்து கிடக்குதே - எங்கும்
வண்ண வண்ண
வண்ணாத்திகள் செத்து கிடக்குதே

நாட்டு பசள போட்டு நெல்லு
விளைஞ்சி நிக்குது
அத ஆக்கி போட்டு
திண்ணு வந்தா ஆயுள் நீளுது

வெளிநாட்டு காரன் தந்த
விஷத்த தின்னுறம்
வந்த வேலை நெருங்கும் முன்னே
எங்க விதியும் முடியுதே


ஆரோக்கியமா உணவு கிடைச்சா
ஆயுள் நீடிக்கும் - இந்த
நஞ்ச திண்ணு திண்ணு தானே
நாசமாகுறம்

ஏர் எடுத்து வாறன் அம்மா
உழுது போடுறம்
எரு வெடுத்து போட்டு ... நல்ல
விதைகள் நாட்டுவம்

உலகம் திருந்த உதவும் மருந்த
நாங்க சொல்லுறம் -
எரு வெடுத்து போட்டு .. நல்ல
விதைகள் நாட்டுவம்.

**சூரியா கலாசார குழு**

## மருத்துவ சிகிச்சை முகாம்.





25.06.2022 அன்று மாற்றுத் திறனாளிகளுக்கான இலவச மருத்துவ சிகிச்சை முகாம் நடந்தது. இதில் ஏறாவூர் வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்தியர்கள் வைத்தியர் ப.பிரசன்னா, வைத்தியர் மெலானி சோபியா இமானுவல் ஆகியோர் கடமையாற்றினர்.

தற்போதைய சூழலில் போக்குவரத்து என்பது அடிக்கடி முற்றாக முடங்கி வருகிறது. இந்த நிலையில் நகரத்தில் இருந்து அதிக தூர ஊர்களில் வசிக்கும் கட்டாய வைத்திய சிகிச்சை பெற வேண்டிய மாற்றுத்திறனாளிகள் மிகுந்த சிரமத்தை எதிர்கொள்கின்றனர். வருமானம் அற்ற சூழலில் தினம் தினம் உயரும் போக்குவரத்துக் கட்டணங்கள், கால் வைக்க இடமின்றி தொங்கிச் செல்லும் பயணிகள், மிகக் குறைந்த அளவில் மட்டுப்படுத்தப்பட்ட போக்குவரத்துக்கள்...இதற்குள் போட்டி போட முடியாது தவிக்கும் மாற்றுத் திறனாளிகள்.

சிகிச்சை பெற்ற பெண்களில் சிலர் குறிப்பிடுகையில் " நான் என்ர கிளினிக் கொப்பியை தூக்கி எறிந்து விட்டேன். ஆஸ்பத்திரியில் எங்கள ஒரு மனுசனா பாக்கிறதே இல்ல. மாற்றுத் திறனாளி என்று சொன்னாலும் வைத்திய சாலை ஊழியர்கள் மனுசன் என்ற மதிப்பே இல்லாம வாய்க்கு வந்த மாதிரி கண்டமாதிரி கதைப்பாங்க. இங்க நீங்க எவ்வளவு ஆறுதலா கதைக்கீங்க. ஏன் அப்படி ஆறுதலா எங்களோட அவங்களால கதைக்க முடியல்ல.

"எங்களுக்கு ஒரு அடையாள அட்டை இருந்தா இப்படி நாங்க யார் என்று இவங்களிட்ட ஒரே சொல்லி சொல்லி கெஞ்சித்து நிக்க தேவல்லதானே தேவையான இடத்தில நாங்க பாவிப்பம்.."

"இது வரைக்கும் எனக்குள்ள வைச்சி பயந்த வருத்தத்த இண்டைக்குத்தான் வெளியில சொன்னன். எனக்கு இப்ப விடுதலை கிடைத்த மாதிரி நிம்மதியாக இருக்கு"

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்**

இல. 4/1, தோமஸ் லேன், மட்டக்களப்பு.
தொ.இல : 065 - 2223297
மின்னஞ்சல் : suriyaw@slt.lk

முகவரி :.................................................
.................................................
.................................................
.................................................

Issn No. 1391-6130



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org